களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Kalanjiyam - International Journal of Tamil Studies (KIRJTS)
*An Internationally Peer-Reviewed, Open Access Quarterly Journal*
*eISSN: 2456-5148*
*Vol. 4 Issue: 04 November 2025*
https://doi.org/10.63300/kirjts

# Life Ethics Portrayed in Silappathikaram among the Five Great Epics

**T. Shanmugam*,**
Ph.D. Research Scholar,
Department of Tamil, Annamalai University, Annamalai Nagar - 608002.
Email: slohitha2011@gmail.com
**Dr. S. Kodiyarasu**,**
Research Guide & Assistant Professor, Department of Tamil, Annamalai University,
Annamalai Nagar - 608002.

**Abstract:**

Silappathikaram is the foremost among the five great epics of Tamil literature. Among its many distinguished features, its stylistic excellence is perhaps the most prominent. For those who study literature, the "style" (nadai) serves as the primary gateway to the heart of a work. Literary style is an indispensable tool for conveying the authentic emotions of the human soul to others. In this epic, the manner in which the poetic style is adapted to suit the diverse feelings and narratives of various characters—ranging from ruling monarchs and artists to religious scholars and common citizens—is truly remarkable and worthy of high praise.

Through Silappathikaram, the author Ilango Adigal has established various life principles such as Dharma (Aram), domestic life, moral conduct, the consequences of past deeds (Oozhvinai), and asceticism as essential ethics for living. Therefore, this research paper aims to analyze these life ethics as presented in the epic.

**Keywords** : *Silappathikaram, Tamil Literature, Literary style, Dharma.*

**References:**

1. Ilango Adigal. Silappatikaram. Kazhagam Publications, 1968.
2. Parimelalhagar. Tirukkural. Commentary by V. M. Gopalakrishnamachari, 1938.
3. Puliyur Kesikan. Silappatikaram. Pari Nilayam, 1958.
4. ---. Tolkappiyam. Saradha Publications, 2018.
5. Saminathaiyar, U. V. Manimekalai Moolamum Arumbada Urayum. U. V. S. Edition, 1965.
6. Subramanian, S. V. Patinenkilkanakku Noolgal. Manivasagar Padhippagam, 2010.
7. ---. Silappatikaram. Gangai Puthaka Nilayam, 1998.
8. Tolkappiyar. Tolkappiyam. Saiva Siddhanta Noorpadippu Kazhagam, 1957.

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

KALANJIYAM

# ஐம்பெரும் காப்பியங்களில் சிலப்பதிகாரம் கூறும் வாழ்வியல் நெறிகள்

***தீ. சண்முகம்,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர் - 608002

****முனைவர் ச. கொடியரசு,** நெறியாளர், உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர் - 608002.

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

ஐம்பெரும் காப்பியங்களில் முதன்மையானது சிலப்பதிகாரம். சிலம்பின் சிறப்புக் கூறுகளில் நாம் முதன்மையாக நினைவில் கொள்வது அதன் நடை சிறப்பாகும். இலக்கியம் கற்போர் நெஞ்சில் அதன் நடையே வழியாய் அமையும். மனிதர்களின் உள்ளத்தின் உணர்வுகளை உள்ளபடியே மற்றவர்களுக்கு உணர்த்த இலக்கிய நடையே இன்றியமையாத ஒரு கருவியாகும். இக்காப்பியத்தில் நாடாளும் அரசர் முதல் கலைஞர்கள், சமயச் சான்றோர், சாதாரணக் குடிகள் போன்ற பலரது உணர்வுக்கும் செய்திக்கும் ஏற்ற வகையில் காப்பிய நடையினை அமைத்திருக்கும் முறை வியந்து பாராட்டத்தக்கது ஆகும். இளங்கோவடிகள் சிலம்பின் வழியாக வாழ்வியல் நெறிகளாக அறம், இல்லறம், ஒழுக்கம், முற்பிறப்பில் செய்த ஊழ்வினை, துறவறம் போன்ற செய்திகளை வாழ்வியல் நெறிகளாக அமைத்துக் காட்டியுள்ளார். எனவே இது போன்ற வாழியல் நெறிகள் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**முன்னுரை**

மன்னன் முதல் மக்கள் வரை பிறரால் போற்றப்படுவதற்கும், மதிக்கப்படுவதற்கும் முக்கிய அளவு கோலாக இருப்பது அவர்களுடைய வாழ்வியல் நெறிமுறைகளாகும். வாழ்வியல் நெறிமுறைகள் என்பது மக்கள் இப்படித்தான் வாழ்க்கையை வாழ வேண்டும் என சான்றோர்களாலும் ஆன்றோர்களாலும் வகுத்து தொகுத்து தந்த வரையறைகள் அல்லது விதிமுறைகள் ஆகியவற்றுக்கு உட்பட்டு அல்லது அதன் படி தங்களை நெறிபடுத்தி வாழவேண்டும் என்பதேயாகும். எப்படியும் வாழலாம் எனக் கனவு காண்பவர்கள் இழிவுப்பாதையில் சென்று இடர்பாடுகள் இப்படித்தான் வாழவேண்டும் என உறுதி பூண்டவர்கள் ஒளி நிறைந்த இன்பப் பாதையை நோக்கி பயணம் செய்வார்கள். ஒருவன் தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளாமலும், பெருமை பேசிக் கொள்ளாமலும் வாழ்வியல் நெறிப்படி வாழ்ந்தால் அவன் சமுதாயத்தில் உயர்த்தப்படுவான்.

**"தன்னைத்தான் உயர்த்தி நிறுத்துவானும்**
**தன்னைதேத்தான் தாழ்த்துவானும் தான்"[1]**

என்கிறது நாலடியார். இப்பாடலின் கருத்தின் மூலம் நாம் வாழ்வியல் நெறியை உணரலாம்.

**அறநெறி**

அறமும் அன்பினையே முதலும் ஈறுமாய்க் கொண்டு ஈட்டப்படுதலும் நுகரப்படுதலும் செய்யப் பெறுதலும் வேண்டும் என்பது தொல்காப்பியரின் கருத்து. இத்தகையான கொள்கையை கூறுபவர்

**"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**

**அன்பொடு புணர்ந்த ஐந்திணை"[2]**

என்ற நூற்பாவில் விளக்கியுள்ளார். வள்ளுவப் பெருந்தகையும் தமது கருத்தை இக்குறளின் வாயிலாக

**"அறத்திற்கே அன்புசார் யென்ப அறியார்**

**மறத்திற்கும் அஃதே துணை."[3]**

கூறியுள்ளமை ஈண்டு ஒப்பு நோக்கி உணரத்தக்கது ஆகும். எனவே உண்மையன்பு இன்றி யாதாவது ஒரு பயன் கருதி ஆற்றும் அறம் நன்மை பயவாமை நன்கு அறியப்படும். இங்ஙனம் பயன் கருதி அறம் செய்வார் தமது கைப்பொருளாலன்றிப் பிறரது பொருளாற் செய்தற்கும் துணிவர்.

இக்காப்பியத்தில் சிறப்புமிகு மூன்று வாழ்வியல் நெறிகள் பதிகத்தில் கூறப்பட்டுள்ளன. அதில் அறமே முதலில் கூறப்பட்டதும் அறத்தின் சிறப்பை உணர்த்துவதாக அமைந்துள்ளது. அவைகள்,

**"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதும்**

**உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்**

**ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்"[4]**

அரசியல் நெறியிலே பிழைத்தவர்களுக்கு அறமே கூற்றாக அமைந்து அவர் உயிரையே போக்கும் என்பதை இப்பதிகத்தின் வாயிலாக அறியும் மிகச்சிறந்த அறநெறிகள் ஆகும்.

தொல்காப்பியர் 'அறம்' என்பதை ஒன்றாக கூறினாரின்றி அதனை 'இல்லறம்', 'துறவறம்' என்று இரண்டாக பகுத்து யாண்டும் ஓதினாரில்லை. அவர் இன்மை இன்பம் விழைந்து தாம் காதலன்பு பாராட்டிய மனைவி மக்களோடு ஒருங்கிருந்து நடத்திய அன்பு வாழ்க்கையும், மறுமையின்பம் அவாவி மனைவி மக்கள் தமக்கு தொண்டு செய்ய இம்மை முயற்சியினின்று நீங்கி இறைவன் திருவருளில் தமது உணர்வினைத் தோய்வித்திருக்கும் தவ வாழ்க்கையும் ஓர் அறத்தினுள்ளேயே அமைந்த இருவகை நிலைகளாகும் என்ற கருத்துடையவர் என்பதை,

**"காமஞ் சான்ற கடைக்கோட் காலை**

**ஏமஞ் சான்ற மக்களோடு துவன்றி**

**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**

**சிறந்தது பயிற்றல் இறந்தன் பயனே"[5]**

என்ற நூற்பா மூலம் அறியலாகும் செய்திகள் ஆகும்.

காதலன்பால் துய்த்த காமவின்பம் நிறைந்து கடைக்கொண்டு வாழ்நாள் எல்லையின் நடுக்காலத்தில் தமக்குக் காவலாய் அமைந்த தம் புதல்வரோடு கூடியிருந்தும் தாம் அதுகாறும் செய்த போந்த அறத்தை இனித் தாம் செய்யலாகாமையின் தமக்காக அவ்வறத்தைச் செய்யும் சுற்றத்தாருடன் அமர்ந்தும் குடும்பத் தலைமகனும் தலைமகளும் சிறந்ததாகிய தவத்தில் தமதுணர்வினைப் பயிலச் செய்தல் தாம் அதுகாறும் செய்த போந்த காதல் மனைவாழ்க்கையின் பயனாகும் என்ற கருத்தை தொல்காப்பியர் கூறுகிறார்.

**இல்லற நெறி**

இல்லற வாழ்வும் காதலும் இன்றியமையாதவை என உணர்ந்த இளங்கோவடிகள் அவற்றை பழிக்கவில்லை. 'இன்துணை மகளிர்க்கு இன்றியமையாகக் கற்புக் கடம் பூண்ட' கண்ணகியைப் பொற்புடைத் தெய்வமாகக் கவுந்தியடிகள் புகழ்வதாக இளங்கோ காண்பது, அந்த இல்லறத்தின் மீது அவர் கொண்டுள்ள மதிப்பைக் காட்டுகிறது. தலைவனும் தலைவியும் பல்லோர் அறியத் திருமணம் புரிந்துக்கொண்டு வாழ்க்கை நடத்துதலே இல்லறவொழுக்கம் என்று ஆன்றோர் குறிப்பிட்டுள்ளனர். தொல்காப்பிய ஆசிரியர் இல்லறவொழுக்கத்தை,

**"மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்**
**இவைமுதலாகிய இயல்நெறி பிழையாது**
**மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்**
**பிரிவோடு புணர்ந்து கற்பென படுமே"**[6]

எனக் குறிப்பர்.

களவு வெளிப்பட்ட பின் தமர் கொடுப்பக் கொள்ளும் மணவினை நிறைவேறியபின் மலிவு, புலவி, ஊடல், உணர்வு, பிரிவு ஆகிய ஐந்து கூறுகளும் அடங்கிய பகுதியே கற்பென வழங்கப்பெறுவது. கற்பு என்பது தான் இல்லறவொழுக்கம் ஆகும். தொல்காப்பியத்தில் 'கற்பு' என்று வரும் இடங்களை எல்லாம் ஆராயின், அது 'இல்லறம்' என்ற பொருளையே குறித்தல் அறியலாம். கற்பு என்பதற்கு "மகளிற்கு மாந்தர்மாட்டு நிகழும் மன நிகழ்ச்சி" என்று இளம்பூரணாரும், 'தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதோடு மேற்கோள்' என்று நச்சினார்க்கினியாரும் கூறுவர்.

காதலர் கூடிப் பெறும் இன்பத்தை வைகுந்த லோக இன்பமும் விஞ்சாது என்ற கருத்தில்

**"தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்**
**தாமரைக் கண்ணான் உலகு"**[7]

என்று பேசும் திருக்குறள், அதேபோல, இல்லறம் புகுந்த கோவலனும் கண்ணகியும் சுவர்க்க இன்பம் துய்த்தனர் என்பார் இளங்கோவடிகள்.

**"உத்தர குருவின் ஒப்புத் தோன்றிய**

**கயமலர்க் கண்ணியும் காதல் கொழுநனும்”[8]**

என்று கூறி, இவர்கள் தோன்றிப் போகம் நுய்த்ததால் பூம்புகாரும் போக பூமியான உத்தர குருவை ஒத்தது என்று மொழிகிறார். ஒத்த அன்பில் போகம் நுகர்வதே உத்தர குருவின் தன்மை என்பதால், கோவலனும் கண்கியும் ஒத்த அன்பினராய்ச் சிறந்தனர் என்பது தெளிவு.

இருவரும் ஒருயிராய் இணைந்து இன்புற்ற சிறப்பை அடிகள் ஒருநாள் நிகழ்ச்சியின் ஓவியத்தால் விளக்குவார். மாலையில் மணிக்கால் அமளியில் இருந்த அவர்கள், மலர்களின் மணத்தை வாரி உண்டு. வண்டோடு புகுந்து தென்றலில் மகிழ்ந்தனர்; காதல் பெருக்கெடுத்தது.

**“வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்**

**கண்டுமகிழ் வெய்திக் காதலின் சிறிந்து”[9]**

காதலின்பம் இல்லறத்தின் ஒரு பகுதியே. அதுவே முதலும் முடிவுமாகிவிடாது. சுற்றம் பேணல், அறநெறியாளரை ஆதரித்தல், விருந்தோம்பல் முதலிய கடமைகளை ஆற்றுதல் இல்லறத்தின் சிறப்பாம். எனவே,

**“மறப்பரும் கேண்மையோடு அறப்பறி சாரமும்**

**விருந்து புறந்தரூஉம் பெரும்தண் வாழ்க்கையும்**

**வேறுபடு திருவின் வீறுபெறக் காண”[10]**

என்ற வரிகள் மூலம் விளக்குகிறார் ஆசிரியர்.

இருவரும் தனி இல்லத்தில் வாழ்வதற்கு ஏற்பாடு செய்தாள் கோவலன் தாய். அங்கு அறம் இயற்றி இன்பம் துய்த்துச் சீரோடும் சிறப்போடும் சில ஆண்டுகள் வாழ்ந்தனர் இருவரும். இதனை,

**“ஆண்டுசில கழிந்தன இற்பெருங் கிழமையில்**

**காண்தகு சிறப்பின் கண்ணகி தனக்கென”[11]**

என்பார் அடிகள்.

யாக்கை, இளமை பொருள் முதலியன புவியின் கண் நிலைத்திருப்பதில்லை என்பதை புரிந்து, அவை உள்ளபோதே அனைத்து இன்பமும் துய்க்கத் துடிப்போர் போல், கோவலனும் கண்ணகியும் அழகுகெடாத அனைத்து இன்பத்தையும் அனுபவித்தனர். சினங்கொண்ட பாம்புகள் ஒன்றுபட்டுத் தழுவினபோல், காமனும் இரதியும் எனச் சேர்ந்து, அலகிலாப் போகமெல்லாம் துய்த்தனர் அவர்கள், இதனை,

**“தூமப் பணிகளொன்றித் தோய்ந்தால் என ஒருவார்**

**காமர் மனைவிஎனக் கைகலந்து – நாமம்**

**தொலையாத இன்பமெலாம் துன்னினார் மண்மேல்**

**நிலையாமை கண்டவர் போல் நின்று”[12]**

என்ற மங்கல வாழ்த்துப் பாடல் வெண்பாவில் இல்லறத்தின் மாண்பை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**ஒழுக்க நெறி**

மக்களது நல்லறிவின் பயனாக அமைவது ஒழுக்கமாகும். வாழ்க்கையிலே மேன்மேலும் உயர்ச்சி அடைவதற்குக் காரணமாக அமைவதும் ஒழுக்கமாகும்.அவ்வொழுக்க உணர்வுடைய மக்கள் 'உயர்திணை' எனச் சிறப்பிக்கப் பெற்றார்கள். அவ்வொழுக்க உணர்ச்சி இல்லாத ஏனைய உயிர்களும் உயிரில் பொருட்களும் 'அஃறிணை' என வழங்கப்பெற்றன.

விலங்கு முதலிய தாழ்ந்த உயிர்களின்றும் மக்களைப் பிரித்து உயர்திணையாக உயர்த்துவது மன உணர்வின்பாற்பட்ட நல்லொழுக்கமே ஆகும்.ஒழுக்கமே எல்லோருக்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதால் அந்த ஒழுக்கமே உயிரைவிடச் சிறந்ததாகப் போற்றப்படும் என்று வள்ளுவர் கீழ்க்கண்டவாறு அறவுறுத்தகிறார்.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்"**[13]

தமிழர் தம் வாழ்வியலில் தலைசிறந்தது ஒழுக்கம். உலகம் என்பது உயர்ந்தோரை மட்டுமே குறிக்கும். உயர்ந்தோர் என்பவர் ஒழுக்கத்திற் சிறந்தோர் என்பது தமிழரின் பண்பு. அறத்தின் வழிநின்று, பொருளைத் தேடி இன்பத்தைப் பெறு என்பது தமிழகப் பண்பு.**"மானத்தை இழப்பதா? என்ற ஒருநிலை வந்துவிட்டால் உயிரை இழந்தேனும் மானத்தைக் காப்பாற்று என்பது தமிழர் நெறி"**[14] **என்று கி.ஆ.பா. விசுவநாதம்** விளக்குகிறார்.

மனிதன் வாழ்வியல் நெறிப்படி வாழந்தால் அதனுடைய சிறப்புக் குறித்து வள்ளுவர் மேலும் கூறும்பொழுது, ஒழுக்கத்தைக் கடைபிடித்து வாழ்ந்தவர்களே உயர்குடியினராகத் தமிழகத்தில் கருதப்பட்டனர். இதனை தனது குறளில்,

**"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்"**[15]

என்றவாறு சுட்டிக் காட்டுகிறார்.

சிலப்பதிகார காலத்தில் உண்மை நெறியில் நிற்கும் ஒழுக்கமிகு சான்றோர்கள் பலர் இருந்தனர் என்பதனை,

**"ஒடுக்கம் கூறார், உயர்ந்தோர் உண்மையின்**
**முடித்த கேள்வி முழுது உணர்ந்தோரே"**[16]

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

மனைவியின் கற்பு போன்ற பண்புகளை கணவன் எதிர்பார்ப்பது போலவே, மனைவியும் அவனது பண்புகளை எதிர்பார்த்து விரும்பினாள். ஆடவருக்கும் ஒழுங்கு முறைகள் அல்லது வாழ்வியல் நெறிகள் பொதுவானவையே என்பது இளங"கோவடிகள் வற்புறுத்தும் நெறிகளாகும்.இதனை,

**“மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப**

**மணிப் பூ ஆடை – அது போர்த்துக்**

**கருங்கயல் கண் விழித்து, ஒல்கி**

**நடந்தாய்! ; வாழி காவேரி!**

**கருங்கயல் – கண் விழித்து, ஒல்கி**

**நடந்த எல்லாம் நின் கணவன்**

**திருத்து செங்கோல்டி வளையாமை**

**அறிந்தேன், வாழி காவேரி”**[17]

என்ற வரிகளிலும், இதனைத் தொடர்ந்து

**பூவர் சோலை மயில் ஆலப்**

**புரிந்து குயில்கள் இசைபாடக்**

**காமர் மாலை அருகு அசைய**

**நடந்தாய்! ; வாழி காவேரி!**

**காமர் மாலை அருகு அசைய**

**நடந்த எல்லாம் நின் கணவன்**

**நாம வேலின் திறம் கண்டே**

**அறிந்தேன், வாழி காவேரி”**[18]

என்ற வரிகளிலும் விளக்கமாக கூறியுள்ளார்.

ஒழுக்க நெறியிலிருந்து விலகி தீயவழிக்குத் திரும்பி தன் வாழ்க்கையை மேற்கொண்டோருக்கு சிலப்பதிகாரத்தில் ‘போற்றா ஒழுக்கம் புரிதல்’ கடியப்பட்டது.

இதனை,

**“வாய்அல் முறுவற்கு அவர் உள்ளம் வருத்தப்**

**போற்றா ஒழுக்கம் புரிந்தீர்”**[19]

என்ற வரிகளில் நாம் உணரலாம்.

வாய்மையின் வழிநின்று, மன்னுயிர் போற்றுவோர்க்கு எய்தா அரும்பொருள் எதுவும் இல்லை என்னும் கருத்துடையவர்கள் சிலப்பதிகார காலத்துச் சமுதாயத்தினர்.

இக்கருத்தை வலியுறுத்த வந்த இளங்கோவடிகள்,

KALANJIYAM

**“வாய்மையின் வழாஅது மன்னுயிர் ஓம்புநர்க்கு**

**யாவதும் உண்டோ, எய்தா அரும்பொருள்”[20]**

என்பார். இதனையே வள்ளுவர் உணர்த்தும்போது

**“பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை**

**எல்லா அறமும் தரும்”[21]**

என்ற குறளில் ஒருவனுக்குப் பொய் இல்லாமல் வாழ்தலைப் போன்ற புகழ்நிலை வேறொன்றும் இல்லயென குறள்நெறி கொண்டவர்களை மேன்மை பாராட்டுகிறார்.

சிலப்பதிகாரத்தைத் தொடர்ந்து உருவான இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையும் ஒழுக்கத்தின் மேன்மையை எடுத்துரைக்கின்றது. **“பொய்யான ஒழுக்கம் பொருளெனக் கொண்டோர், கொடிய துன்பத்தினின்றும் மீளமுடியாததென்னும் கொள்கையினர்”[22] “மண்பேருலத்து வாழ்வோர்க்கு இங்கிவை துன்பந் தருவன, துறத்தல் வேண்டும்”[23]** என்று தீயன போக்கத் துடிக்கும் நெறியினர் சிலப்பதிகார காலத்து மாந்தர்கள்.

இரண்மாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே ஒழுக்க நெறி தவறாமல் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்நெறியின் மூலம் அறியலாம். எனவே மக்கள் எப்போழுதும் உய்ர்ந்தவர்களாக உருவாக காரணமாய் ஒழுக்கநெறி அமைகிறது என்பதில் ஐயமில்லை.

**துறவற நெறி**

இவ்வுலகில் வாழ்க்கை நீடு நின்பதன்றாய்ச் சடுதியில் எதிர்பாராது மறைந்தொழிவதாலும், நிலைப்பேறில்லாப் பொருள்கள் நிலையற்ற சிற்றின்பத்தையே தரக் காண்டலாலும் தொல்காப்பியர்,

**“பாங்கரு சிறப்பிற் பன்னெறி யானும்**

**நில்லா உலகம் புல்லிய நெறித்தே”[24]**

என்று காஞ்சித்திணை நூற்பாவால் ‘நிலையாமையை’ வற்புறுத்தித் தவ வாழ்க்கையின் மூலம் நமக்கு ஒப்பற்ற துணைவனாக உள்ள இறைவனை இறுகப் பற்றும்படி ஆற்றுப்படுத்துவர்.

மிக்க காமத்து வேட்கை நீங்கிய கணவனும் மனைவியும் வீடு பேற்றினை விரும்பிப் பற்றற வாழும் துறவுநிலையை தொல்காப்பியர் ‘அருளொடு புணர்ந்த அகற்சி’ என்று குறிப்பிடுவார். இதனை இளம்பூரணார், அருளுடைமை, கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, புணர்ச்சி விளையாமை, கள்ளுண்ணாமை, துறவு என்பனவற்றை பொருந்துவன என கூறுகிறார்.

அருளுணர்வு மிகுந்து தன்னலம் தேய்ந்து அழிந்த பின், வாழ்க்கையில் பற்று எல்லாம் அற்றுப்போகும். அப்போது .ல்லறத்தில் இருந்துகொண்டு அகத்துறவோ, இல்லறத்தைவிட்டு வாழும் புறத்துறவோ மேற்கொள்ளுவர். ஒருவன் எதனிடம் பற்றுக்கொண்டு வாழ்கின்றானோ அதனால் துன்பம் அடைவான்.எதிலிருந்து பற்று நீங்கி வாழ்கின்றானோ அதனால் அவனுக்குத் துன்பம் இல்லை.

KALANJIYAM

ஆகையால் துன்பம் அற்ற வாழ்வை விரும்பினால் எல்லாம் உள்ளபோதே பற்றற்ற துறவு வாழ்க்கை மேற்கொள்ளவேண்டும்.துறந்த பின்பு இந்த வாழ்க்கையில் கைகூடும் இன்பங்கள் பல உண்டு.

**"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**

**அதனின் அதனின் இலன்"[25]**

என்றும்,

**"வேண்டின் உண்டாகத் துறக்க துறந்தபின்**

**ஈண்டியாற் பால பல"[26]**

என்றும் திருவள்ளுவர் துறவைப் பற்றி உணர்த்துகிறார்.

'துறவு கொள்ளல்' என்பது அக்கால மக்களிடையே காணப்பட்ட ஒரு வழக்கமாகும். கோவலன், கண்ணகி, பாண்டியமன்னன் ஆகியோருக்கு நேர்ந்த துன்பத்தினைக் கேள்விப்பட்ட கோவலனின் தந்தை மாசாத்துவான், தன்னிடமுள்ள பொருட்களை எல்லாம் தானம் செய்து இந்திரனால் அமைக்கப்ட்ட ஏழு விகாரங்களுள்ளும் புகுந்து, தன் உடலினது பிறப்பு நீங்கும் வண்ணம் துறந்த சாரணர் முன்பு துறவு பூண்டான்.[27]. **கண்ணகியின் தந்தை மாநாய்கன் ஆசிவகர் முன்பு புண்ணியதானம் செய்து துறவு பூண்டான்.[28]**

மாதவி போதிமரத்தின் நிழலில் இருந்த முனிவர் முன்னர்த் துறவு மேற்கொண்டதோடு மட்டுமல்லாமல், தன் மகள் மணிமேகலையையும்அவளுடைய குழலைக் களைத்து துறவறப்படுத்தினாள் என்பதை,

**"மணிமேகலையை வான்துயர் உறுக்கும்**

**கணிகையர் கோலம் காணாது ஒழிக எனக்**

**கோதைத் தாமம் குழலொடு களைந்து**

**போதித் தானம் புரிந்து அறம் கொள்ளவும்."[29]**

மற்றும்,

**கோதைத் தாமம் குழலொடு களைந்து**

**போதித் தானம் புரிந்து அறம் படுத்தனள்."[30]**

வரிகளில் காணலாம்.

இறுதியாக சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகள் துறவறம் பற்றி ஆசிரியர் கூறும்பொழுது, குற்றமற்ற பிச்சைப் பாத்திரத்தினையும், தோள்மேல் உறியையும், கையில் மயில் தோகையையும் வைத்துக்கொண்டு மொழிப்பொருள் தெய்வமாக அமைகின்ற, 'ஓம் நமசிவாய', 'ஓம் நமோ நாராயணாய', அ சி ஆ உ சா, போன்ற மந்திரங்களே வழித்துணையாக அமைய, குற்றமற்ற அரிய சிறப்பினையுடைய சமணத் துறவியாக காப்பியத்தில் இளங்கோவடிகள் காட்டியுள்ளார்.[31]

**முடிவுரை**

வாழ்வியல் நெறிகளையும் அதன் கூறுகளையும் நினைவுப்படுத்தி, வலியுறுத்திப் பேசி மனித வாழ்வில் மாண்பினை நிலை நாட்ட முயன்றது சிலப்பதிகாரம். மனித வாழ்வில் மகிழ்ச்சி நிறைந்திடவும், குறைகளை குன்றி ஏற்றத்தாழ்வுகள் நீங்கவும் இடையறாது முழங்கியது சிலப்பதிகாரம் ஆகும்.மனிதன் எந்த சூழ்நிலையிலும் தவறாமல் அறத்தை கடைப்பிடிக்க வேண்டும். மேலே கூறிய அறம், ஒழுக்கம், இல்லறம், துறவு போன்ற வாழ்வியல் நெறிகள் நம் வாழ்க்கையின் அனைத்து படி நிலைகளிலும் மனிதர்களை மேம்படுத்த உதவும் காரணிகளாக அமைகின்றன என்பதில் ஐயமில்லை. மக்கள் வாழ்வில் தீமை கலைந்து நன்மை ஏற்பட்டு வளமுடன் வாழ நாம் கூறிய வாழ்வியல் நெறிகளை பின்பற்றி அதை செயல்படுத்தி வாழ்க்கையை ஒழுங்குப்படுத்தி வாழ்வோம். இறுதியாக சிலப்பதிகாரம் காலம் முதல் இக்காலம் வரையிலும் இவ்வாழ்வியல் நெறிகள் நமக்கு பெரிதும் உதவுகிறது என்பதையே இக்கட்டுரையின் மூலம் அறியலாகும் செய்திகள் ஆகும்.

**அடிக்குறிப்புகள்**

எம்.எல்.ஏ (MLA) முறைமை என்பது பொதுவாக இலக்கிய ஆய்வுகளில் பயன்படுத்தப்படும் ஒரு மேற்கோள் காட்டும் முறையாகும். நீங்கள் வழங்கிய தகவல்களை எம்.எல்.ஏ எட்டாம் அல்லது ஒன்பதாம் பதிப்பின் விதிகளுக்கு ஏற்ப, தமிழ்ச் சூழலுக்குப் பொருத்தமாக கீழே வரிசைப்படுத்தியுள்ளேன்.

எம்.எல்.ஏ முறையில் நூலின் பெயர் சாய்வெழுத்திலும் (**Italics**), பாடல் அல்லது நூற்பா எண்கள் தெளிவாகவும் குறிப்பிடப்பட வேண்டும்.

**இலக்கியச் சான்றுகள் (Works Cited)**

1. *நாலடியார்*, பாடல் 248.
2. தொல்காப்பியம். *களவியல்*, நூற்பா 1.
3. திருவள்ளுவர். *திருக்குறள்*, குறள் 76.
4. இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*, பதிகம் வரி 55-57.
5. தொல்காப்பியம். *கற்பியல்*, நூற்பா 51.
6. தொல்காப்பியம். *செய்யுளியல்*, நூற்பா 179.
7. திருவள்ளுவர். *திருக்குறள்*, குறள் 1103.
8. இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*, 2: 10-11.
9. இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*, 2: 24-25.
10. இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*, 2: 85-87.
11. இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*, 2: 89-90.
12. இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*, 1: வெண்பா.

13. திருவள்ளுவர். *திருக்குறள்*, குறள் 131.
14. விசுவநாதம், கி. ஆ. பெ. *தமிழ் மக்களின் வாழ்வியல்*. பாரி நிலையம், ப. 43.
15. திருவள்ளுவர். *திருக்குறள்*, குறள் 133.
16. இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*, 16: 80-81.
17. இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*, 7: ஆற்றுவரி 25.
18. இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*, 7: ஆற்றுவரி 26.
19. இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*, 16: 80-81.
20. இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*, 11: 158-159.
21. திருவள்ளுவர். *திருக்குறள்*, அதிகாரம்: வாய்மை, குறள் 296.
22. சாத்தனார். *மணிமேகலை*, 23: வெண்பா 1.
23. சாத்தனார். *மணிமேகலை*, 23: 124-125.
24. தொல்காப்பியம். *புறத்திணையியல்*, நூற்பா 18.
25. திருவள்ளுவர். *திருக்குறள்*, குறள் 341.
26. திருவள்ளுவர். *திருக்குறள்*, குறள் 342.
27. இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*, 27: 90-96.
28. இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*, 27: 98-100.
29. இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*, 27: 105-108.
30. இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*, 30: 27-28.
31. இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்*, 10: 98-101.

**துணை நூல் பட்டியல்**


1. **இளங்கோவடிகள்.** *சிலப்பதிகாரம்*. கழக வெளியீடு, 1968.
2. **சாமிநாதையர், உ. வே. சா.**, பதிப்பாசிரியர். *மணிமேகலை மூலமும் அரும்பத உரையும்*. 6-ஆம் பதிப்பு, உ. வே. சா. பதிப்பு, 1965.
3. **சுப்பிரமணியன், ச. வே.** *சிலப்பதிகாரம்*. கங்கை புத்தக நிலையம், 1998.
4. **சுப்பிரமணியன், ச. வே.** *பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்*. மணிவாசகர் பதிப்பகம், 2010.
5. **தொல்காப்பியர்.** *தொல்காப்பியம்*. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1957.
6. **பரிமேலழகர்.** *திருக்குறள் உரை*. வி. எம். கோபாலகிருஷ்ணமாச்சாரி, 1938.
7. **புலியூர்க்கேசிகன்.** *சிலப்பதிகாரம்*. பாரி நிலையம், 1958.
8. **புலியூர்க்கேசிகன்.** *தொல்காப்பியம்*. 8-ஆம் பதிப்பு, சாரதா பதிப்பகம், 2018.


இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.

KALANJIYAM